ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

21.05.2026

1. வேலவா வெற்றி முகம் காட்டி
வேல்படை தன்னை ஞானப்படைகளாக
ஞாலமதில் உருவாக்கி இனிதே
ஞானிகள் ஆட்சி அமைய வேண்டி

2. வேண்டி அற்புதம் நிகழ்த்தும் முருகா
வேண்டி வரும் சீடர் பெருமக்கட்கு
உண்டான குருவார அருளாசியாக
உலகத்தில் அரங்கமகா ஞானியர் யானும்

3. யானும் பராபவ விடை திங்கள்
உயர்வான முதல் குருவார அருளாசிதனை
ஞானம்பெற வேண்டி உரைப்பேன்
ஞாலமதில் வள்ளலார்க்கு தைபூசம் போல

4. போலவே அரங்கன் எந்தனுக்கு
புகலுவேன் வைகாசி பூச விழாவாக
உலகமெங்கும் அன்பர்கள் சேர்ந்து
ஓங்காரக் குடிலில் விழா எடுக்க நலம்

5. நலம் தரும் முதல் பூசை விழாவாக
நன்றே இந்த நன்னாளில் துவக்கி
பலம்பெற அன்னதான சேவையோடு
பாருலகில் ஞானிகள் பூசையாக செய்து

6. செய்து மாதருமமும் புரியவே
சீடர்கட்கும் வரும் மக்கட்கும்
அய்யன் வேலவன் துணைபட
அரங்கன் மகா சக்தியாக இறங்கி

7. இறங்கி யாவர்க்கும் ஞானமும்
எண்ணிய காரியம் வெற்றிபெற
வரங்களும் தந்தருள் புரிவேன்
வரலாறு படைக்கின்ற வண்ணம்

8. வண்ணமுடன் உலகினில் மாற்றம்
வளமாக நல்லாட்சி அமைய
எண்ணம் வழி ஆளுபவர்களிடை
எளிமை தயவு தருமசிந்தை

9. சிந்தை தெளிவு மாற்றமும்
சேவையில் பாரபட்சம் இன்றி
விந்தைபட அற்புதம் நிகழ்த்துவேன்
விழாநாளில் இன்று எம்மோடு

10. எம்மோடு வேலவன் ஞானிகள்படை
இணைந்து மகத்துவம் தரவிருக்க
நம்பிக்கை வைத்து பிரணவக்குடில்
நாடியே அருளமுது உண்டு

11. உண்டான அன்னதான சேவையில்
உயர் பங்களிப்பு செய்துமே
தொண்டர்களாக இணையவே
தேசிகன் என் ஆசிபட கடைத்தேறுவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி